23-6-1986
PERIODICALS DIVISION

விலே ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 9 ஷவ்வா 14 இதழ் 132

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-6-1986

## இலங்கை, பஞ்சாப்பிரச்னையில் வெளிச்சக்திகளின் தலையீடு

### — லண்டனில் சிவ்சங்கர்

(லண்டன்)

பஞ்சாப், இலங்கை பிரச்னைகள் மூலம் இந்தியக் கண்டத்தின் உறுதிப்பாட்டைக்குலைக்க சில வெளிச்சக்திகள் ஈடுபட்டு வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் பேசும்போதே திரு. சிவ்சங்கர் இதனைத்தெரிவித்தார்.

**ஆதாரம் உண்டு**

வெளிசக்திகளின் இந்த சீர்குலைவு வேலைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஆவணங்கள் வாயிலான தக்க ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் அவர் கூறினர்.

இலங்கையில் தற்பொழுது நிகழும் ஆயுத விநியோகம் கூலிப்படைகள், பாகிஸ்தான், இஸ்ரேல் உறவுகள் இதற்கு தக்க ஆதாரங்களாக உள்ளதாகவும் அமைச்சர் கூறினர்.

இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் தொடர்ந்து இருக்கும் என்று கூறிய திரு. சிவ்சங்

[8ம் பக்கம் பார்க்க]

● 25-ந் திகதி சர்வகட்சி மகாநாடு

# "இந்திய அமைதி முயற்சிக்கு எதிரான நடவடிக்கை"

## சென்னையில் அமிர் அறிவிப்பு

சென்னை, ஜூன் 22,

"இலங்கை அரசு இம்மாதம் 25ம் திகதி கூட்டவிருக்கும் சர்வகட்சி மகாநாடு, இலங்கை இனப்பிரச்னைக்கான இந்தியாவின் அமைதித் தீர்வு முயற்சிகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகும். இலங்கையில் அப்பாவித் தமிழர் கொல்லப்படும்போது இம் மகாநாட்டில் பங்குபற்றுவதில் எதுவித பயனும் இல்லை" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக ஆலோசனை நடத்தும் பொருட்டு இம் மாதம் 25ம் திகதி ஒரு சர்வகட்சி மகாநாட்டுக்குவரும்படி அழைப்பு விடுத்திருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வமைப்பு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி 'பொலிட் பிரார் நேற்றுக்கூடி ஆலோசனை நடத்தியதன் பின்னர் மகாநாட்டில் கலந்து கொள்வதில்லையென்று முடிவு செய்யப்பட்டது.

தமிழீழவிடுதலைப்புலிகள், தமிழ்ஈழமக்கள் விடுதலை இயக்கம், ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் இம்முடிவு எடுக்கப்பட்டதாக திரு. அமிர்தலிங்கம் அறிவித்தார். கூட்டணியின் இவ் முடிவு தந்திமூலம் இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அறிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிக்கு மாநாடு எதிராக அமையும் என்றும், அப்பாவித் தமிழ்மக்களை இலங்கை ராணுவத்தினர் கொன்று குவித்து வரும் இந்தத் தருணத்தில் இம் மாநாட்டில் கலந்து கொள்வதால் பயனேதும் கிடையாது என அமிர் மேலும் தெரிவித்தார்.

## த.வி.கூ பங்குபற்றாது

ராய்ட்டர் ஞாயிறு

இம்மாதம் 25 ம் திகதி இனப்பிரச்சினை குறித்து நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிகளின் மாநாட்டில் தமிழர்விடுதலைக் கூட்டணி பங்குபற்ற மாட்டாது என கட்சியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு திரு. அமிர்தலிங்ம் கடிதமொன்றையும் எழுதியுள்ளார்.

## இன்னமும் விடுதலை இல்லை

மட்டக்களப்பு, ஞாயிறு

பாண்டிருப்பி ஆயுதப் படையினர் நடாத்திய தேடுதல்வேட்டையின்போது கைது செய்யப்பட்ட மாரியம்மன் கோவில் தர்மகர்த்தாக்களும்

[8ம் பக்கம் பார்க்க]

## சென்னையில் விஜயகுமாரணதுங்க பத்மநாபா சந்திப்பு

சென்னை, ஜூன் 22,

இலங்கை மக்கள் கட்சிசெயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க சென்னையில் ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் பிரமுகர் பத்மநாபாவைச்சந்தித்தார். இச்சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தீவிரவாத அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து பேச்சு நடத்தும் பொருட்டுதிரு குமாரணதுங்க தமிழகம் பயணஞ்செய்துள்ளார்.

தமது பயணத்தின் முதல்

(8ம் பக்கம் பார்க்க)

## "மாவட்ட மட்டத்தில் ஆட்சிப் பகிர்வு பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்தும்" – லலித்

(கொழும்பு)

"தேசத்தின் ஐக்கியத்தை பேணும் அதேவேளையில்ஆட்சி அதிகாரத்தின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை மாகாண மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்படுமாயின் அது பெரும்பான்மையினரைத் திருப்திப்படுத்துவதாக அமையும்' என்று இம்மாதம் 25ம் திகதிநடைபெறவுள்ள அனைத்துக் கட்சி மாநாடுகுறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது அரசாங்கம் செய்ய முற்படுவதெல்லாம் அதிகாரத்தைப் பரவலாக்கும். இந்த நாட்டில் 9 மாகாணங்கள் உள்ளன. அவற்றில் ஒருசில ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கிய போதும் ஏனையவை நான்கு அல்லது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியவையாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இனப் பிரச்னை தொடர்பாக இந்தியா மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளுக்கு உத

(8ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலுக்கு தந்தையும், மகளும் பலி

யாழ்ப்பாணம், திங்கள்

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சிப்பதுங்கியிருந்த ஒரு தந்தையும் மகளும் ஷெல் பட்டு ஸ்தலத்திலேயே பலியானுர்கள்.

நேற்றுநண்பகல் ஒருமணியளவில் புன்னலைக்கட்டுவன்வடக்கில் ஷெல் தாக்குதல் தொடங்கியதும் அப்பகுதிமக்கள் ஓடி ஒளித்துக்கொண்டனர். ஆறுமுகம் கனகரத்தினம் என்பவரும் [வயது 45] கனகரத்தினம் தயாநிதி (17 வயது) என்ற அவரது மகளும் ஷெல் தாக்குதலுக்குப் பயந்துஒழித்திருந்த சமயம் ஒரு ஷெல் வந்து அவர்

(8ம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி; 7 பேர் காயம்

கொழும்பு ஞாயிறு

கந்தளாயில் மோட்டார் சைக்கிளில் கட்டிவைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்புவட்டாரம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை இக் குண்டு வெடுப்புச்சம்பவம் இடம்பெற்றது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்களில் 6 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

(வா)

வவனியா

## தமிழ் கிராமங்கள்தினமும் அதிகாலை சுற்றிவளைப்பு

### ஒரு வாலிபர் மரணம்?

வவனியா ஞாயிறு

வவனியாப் பகுதியில் உள்ள தமிழ்க்கிராமங்கள் தினமும் அதிகாலையில் ஆயுதப்படையினரால் முற்றுகையிடப்பட்டு இளம் வயதினர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு தலையாட்டிகள் என சொல்லப்படுபவர்களினுல் அடையாளம் காட்டப்பட்டு மேல் விசாரணைக்காக முகாமிற்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

இப்படி கொண்டு செல்லப்பட்ட ஒருவாலிபர் சித்திரவதையின்போது இறந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இப்படியான சமீபத்திய சம்பவங்களினுல் வவனியா பிரதேச தமிழ்மக்கள் கலக்கம் அடைந்துள்ளனர் இவ்விடயம் பற்றி வவனியா மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரியுடன் பேசுவதற்கு அனுமதி பெற்றுத்தரும்படி கச்சேரியில் நடைபெற்ற புனர்வாழ்வு சம்பந்தமான கூட்டத்தில் வன்னி பாதுகாப்புக்குழு கூட்டுத் தலைவரான திரு.எஸ். பத்மநாதன் வவனியா அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

## இலங்கைதேயிலை விலையில் மேலும் வீழ்ச்சி

கொழும்பு - ஞாயிறு

சர்வதேச சந்தையில் இலங்கை தேயிலையின் விலை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ இலங்கைத் தேயிலையின் சராசரி விலை 24 ரூபா 25 சதமாக காணப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் இலங்கைத் தேயிலைக்குக் கிடைத்த மிகக்குறைந்த விலை இது என அறிவிக்கப்படுகிறது

இலங்கையின் தற்போதைய சூழ்நிலைகளினுலும், இலங்கைத் தேயிலையில் நஞ்சுக்கலக்கப்பட்டுள்ளது. என்ற பிரசாரத்தையடுத்தும் பெரும்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## பயிற்சி

பாதுகாப்பான சூழலில் மானிப்பாயில் கம்பியூட்டர் பயிற்சிப்(Computer Programming) வகுப்புக்கள் மிகவும் குறைந்த சலுகைக் கட்டணத்தில் ஆரம்பம்: 27-06-1986 O/L படித்த அனைவரும் சேரலாம். தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும். நேரில் வரவும். Unikco Computer Centre சுதுமலைச் சந்தி, 282, யாழ்ப்பாணம் றோட், மானிப்பாய் C 2981

## விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 250/. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C 3004)

Sony T. V. 2020, National 20'' B/W T. V, Grundig 16'' T. V. Color, Sharp வீடியோ டெக். S. T. L. வீடியோ கிளப், No. 3, நவீனசந்தை மேல்மாடி, திருநெல்வேலி (C 3007)

Auto Zooming Auto Forgus Title ஆகிய தன்னியக்க வசதிகள் உடைய மிக அண்மையில் அறிமுகமான J. V. C. Video Camera (Model No. GX. N. 70E) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ''ரெலிகோணர், சாவகச்சேரி'', C 3037)

Petrason கலர் Printing என்லாஜ்ஜர் Yashica கமராக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: உரிமையாளர் திருநீதரன், குயிக் ஸ்ரார் [Quick Star], 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-3006)

## 31-ம் நாள் தெவிட்டாத நினைவுகள்



திருமதி ஞானம்மா சுவாம்பிள்ளை

மண்ணுலகப் பிரவேசம்: 05-03-1912

விண்ணுலகப் பிரவேசம்: 24-05-1986

நிலாச்சோறு தந்த நீ-வானத்து நிலவாகினாயோ? கல்யாணி பாடிய நீ-எம் கண்களைக் குளமாக்கினாயோ? உன் நினைவுகள் - எம் நிழல்களாகத் தொடர்கின்றன. தெவிட்டாது தெவிட்டாது உன்நினைவுகள்.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டப்புலம்,
இளவாலை (C 3036)

## விற்பனைக்கு

''யூனியன்'' மேடைத் தராசு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ''ரட்ணம்ஸ்'', பிரதானவீதி, சுளிபுரம். [C- 3027]

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- வே பத்மநாதன் [கிச்சி], உரும்பராய் கிழக்கு, உரும்பராய். [C-2968]

என்ஜினியர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள் Pioneer Amp. செற், தேக்கு அலுமாரிகள், Vono Spring Double Beds, கட்டில்கள், கண்ணாடி மேசைகள், கிளாஸ் வகைகள், Dinner Sets, Pyrex, Typewriter, புத்தக அலுமாரி, குசினி கபேட் மேசைகள், கம்பளிகள் மற்றும் பல உடன் விற்பனைக்கு. New No: 262, பிரதான வீதி, [Dr. தருமலிங்கம் டிஸ்பன்சறி அருகாமையில்], யாழ்ப்பாணம். C 2979

## சேவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ளும் சார்ட்டெட் சிவில் பொறியியலாளர் ஆலோசனை மற்றும் மேற்பார்வை பணிகளையும் ஏற்கத் தயாராயுள்ளார். தொடர்பு: 'ராஞ்சி', விளான், பண்டத்தரிப்பு. (C 3002)

## தேவை

புதிய அல்லது சொற்பகால பாவனைக்குட்பட்ட 'அகாய்' ஸ்ரீறியோ கஸட் டெக் மொடல் 740/D தேவை தொடர்பு: 'ராஞ்சி', விளான், பண்டத்தரிப்பு. (C 3003)

யாழ்ப்பாணப் பண்ணை ஒன்றில் தங்கியிருந்து விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு வேலைகள் செய்ய அனுபவம் வாய்ந்த தம்பதி தேவை. தொடர்பு:'ராஞ்சி', விளான், பண்டத்தரிப்பு (C 3001)

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலயத்துக்கு தகைமையுடைய குருக்கள் உடனடியாகத் தேவை. நற்சான்றுகளுடன் நேர்முகமாக விண்ணப்பிக்கவும். செயலாளர், நிர்வாகசபை. (C 3025)

சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை தொடர்பு: 120, R. R. நல்லையா வீதி, (1-ம் குறுக்குத் தெரு), யாழ்ப்பாணம். (C 3012)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்கு உட்பட்டதாக இரண்டு படுக்கை அறைகளுடன் சகலவசதியும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. A. பரந்தாமன், எம். பி. வீரவாகு அன் கொம்பனி, 15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் 8.30 a. m to 12.00 noon T.Phone 22604. (C3014)

## பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்கான காணி சுவீகரிப்பு

## அறிவித்தல்

மேற்கண்ட சுவீகரிப்பு எல்லைக்குள் தத்தமது நிரந்தர அல்லது தற்காலிக வீடுகளை விட்டு வெளியேறியோர் 1986-06-26-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தவறாது சமூகமாயிருக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்திகதியில் விலைமதிப்புத் திணைக்களத்தாரின் நஷ்ட ஈட்டுக் கணிப்பு சம்பந்தமான ஆரம்பவேலைகள் இடம்பெறும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ். மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
19-06-1986. (A 859)

## நன்றி நவிலல் அந்தியேட்டி அழைப்பு



செல்லர் சின்னையா
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் Ex-PS 61]

தோற்றம்: 14- 11- 1916

மறைவு: 25- 05- 1986

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட யோகபுரம் கிராம மக்களுக்கும், மற்றும் அவரது ஈமக்கிரியையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்தியேட்டி கிரியைகள் (24- 6- 86) சீனட்டிப்பாய் அளவெட்டி வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அதில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையுடன்கேட்டுக் கொள்ளுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

சாராஸ்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. [A 3011]

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இலட்சுமி ஆகத்தம்மா சின்னய்புநாயகம்

திதி: 25- 6- 86

கடலின் அலை எனக் கவலைகள் மோதினாலும் கடமையிற் சலிக்காத அம்மையே! உனது பிரிவால்- நாம் கலங்கிய காலம் எட்டிவிட்டது.

இன்றைய கொடூரச் சூழ்நிலையில் தாய்மார் அனுபவிக்கும் வேதனைகளை இருந்து பாராது மாயமாய்ப் பறந்து போனாயே- நன்மைக்கே.

புனிதர்களின் உறவில்- உனது முடிவிலாத வாழ்வு ஒளிர்க.

அன்பு நாயகன்,
அருமை மக்கள்,
மருமக்கள், பேரர்.

யாழ்.
பாண்டியன்தாழ்வு. [C3033]

## கிராம அபிவிருத்தியில் கற்கோவளம் சனசமூக நிலையம்

புலோலி, ஞாயிறு

கற்கோவளம் சனசமூகநிலையம் கற்கோவளப்பகுதியின் அபிவிருத்தி மேம்பாட்டையும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சியையும் கருத்திற்கொண்டு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இச்சனசமூகநிலையத்தால் நடாத்தப்பட்ட அபிவிருத்தி நிதி அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின் முதலாவது பரிசான சுமார் 3,000 ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப்பெட்டி நான்குவயதுச்சிறுவனான ப. தேவதாசனுக்குகிடைத்துள்ளது என்று சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்தார்.

## தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

''தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக ஒலித்த குரல் இன்று ஓய்ந்துவிட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக வாதாடும் சிறந்த, நேர்மையான அரசியல்வாதியை நாம் இழந்துவிட்டோம். அவர் மறைவு தமிழ்மக்களுக்கு பேரிழப்பாகும்''

இவ்வாறு கலவான எம். பி திரு. சரத்முத்தெட்டுவேகமவின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்திற்கு கீரிமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (க)

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள்
மற்றும்
பாஸ்போட். BOND, விசா, ரிக்கற்
ஆகியன உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

ரஜீவன் ரவல்ஸ்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (C 3039)

## எமது புதிய வெளியீடுகள்

1. கார்த்திக் — ஸ்ரீபாரதி
"நட்பு" (PYRAMID MASTER)
2. விஜயகாந் — ராதா
"அம்மன்கோவில் கிழக்காலே"
(PYRAMID MASTER)
3. S. P. பாலசுப்பிரமணியம் K.J. யேசுதாஸ்
S. P. சைலஜா பங்குபற்றும்
கங்கை அமரனின்
"இன்னிசைக் கச்சேரி"
(டுபாயில் நடைபெற்றது) (THOMSUN MASTER)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 [C 3038]

## பிரயாண ஒழுங்குகள்

ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்.
ஆகிய நாடுகளுக்கு அனுபவமிக்க எமது முகவர் உடன் அழைத்துச் செல்வார்.
டென்மார்க் உட்பட சகல பிரயாணங்களும் நேரடியாக இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும்.
23, 24ம் திகதிகளில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

S. தர்மராஜா,
சிவன்கோவிலடி, இருபாலை கிழக்கு,
கோப்பாய்.
[இருபாலை சந்தியிலிருந்து 750 யார் உள்ளுக்குள்)
(C 3040)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய — பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் பதற்றம்; பழங்குடியினர்வெளியேற்றம்

புதுடில்லி, ஜூன் 22

இந்திய — பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் பதற்ற நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது திரிபுராவின் தென்பகுதியான பங்களாதேஸ் சிட்டாங்கொங் பகுதியிலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இந்திய—பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் நேற்றுமுன் தினம் இருதரப்பு எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களைத் தொடர்ந்தே இந்தப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

பங்களாதேஷ் தாக்குதல் ஏதும் நடத்துப்பட்சத்தில் அதனை முறியடிக்கும்வகையில் திரிபுராவின் தென்பகுதியான பங்களாதேஷ் சிட்டாக்கொங் மலைப்பகுதியில் சுமார் நூறு மீட்டர் எல்லை நெடுகிலும் இந்தியா தமது படைகளை உஷார்நிலையில் வைத்துள்ளது.

இதேபோன்று பங்களாதேஷும் தமது எல்லைப்பகுதியில் பெருமளவிலான படையினரை குவித்துவைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அப்பகுதியில் யுத்த அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணத்தால் அப் பிரதேசத்தில் வசித்துவந்த சுமார் 16 ஆயிரம் பழங்குடி அகதிகள் திரிபுராவின் உள்பகுதியை நோக்கி நகர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

# “ஆபிரிக்க அகதிகளுக்கு மேலும் உதவிகள் தேவை”

## ஐ. நா. பொதுச் செயலர் கோரிக்கை

வாஷிங்டன், ஜூன் 22

“ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள அகதிகளுக்கு மேலும் அதிகளவிலான சர்வதேச உதவிகள் உடனடியாகத் தேவையாக அமைந்துள்ளது” என்று ஐ நாவின் பொதுச் செயலாளர் திரு பெரஸ் டி குயார் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க அகதிகள்தினத்தையொட்டி பொதுச்செயலர் செய்தி ஒன்றினை வெளியிட்ளார். அச் செய்தியிலேயே அவர் இந்த வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் சுமார் ஐம்பது லட்சத்திற்கு அதிகமான அகதிகள் இருப்பதாக கூறிய செயலர் சர்வதேச உதவிகள் கிடைக்காத பட்சத்தில் அவர்களின் நிலைமை மோசமடையலாம் என்றும் வருத்தம் தெரிவித்துள்ளார். (ரா)

# உலகச் செய்திகள்

## டாக்டருக்கு விருது

புதுடில்லி, ஜூன் 22

டாக்டர் கோவிந்த வெங்கட்சுவாமி இவ்வாண்டுக்கான இந்தியாவின் மதிப்புக்குரிய டாக்டர் ஏ. எம். மேரே விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

டாக்டர் கோவிந்த வெங்கட்சுவாமி மதுரை அண்ணா நகர் அரவிந்த கண் ஆஸ்பத்திரியின் நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

# பஞ்சாப்பில் தொடரும் வன்செயல்; காலவரையற்ற ஊரடங்கு அமுல்

சண்டிகார், ஜூன் 22

பஞ்சாப்பின் சீக்கியப் புனிதநகரான அம்மங்காரில் காலவரையற்ற ஊரங்குசட்டம் அமுல்நடத்தப்பட்டுள்ளது.

இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்குமிடையில் அங்கு இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்தே இந்த ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வன்செயலின்போது ஒருவர் பலியானதுடன் பதினைந்து பேர் படுகாயமடைந்துள்ளனர். கலவரத்தை அடக்கும் வகையில் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோதே ஒருவர் பலியானதாக கூறப்பட்டது. காயமடைந்தவர்களில் அநேகர் சீக்கியர்களாவர். ஐந்து பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவங்களின் போது கடைகள், வீடுகள், மற்றும் பல கட்டிடங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியும், சட்டக்கழக ஆலோசகருமான திரு. ஆர். கே. தேசாயினால் கொண்டுவரப்பட்ட ஹரியானாவின் சண்டிகார் கையளிப்பு நடவடிக்கையை பஞ்சாப் மாநிலஅரசு நிராகரித்துள்ளது. இக் கையளிப்பு நடவடிக்கையானது கடந்த வருடம் ஜூலைமாதம் கைச்சாத்திடப்பட்ட பஞ்சாப் சமாதான அமைப்புக்கு மாறாக உள்ளதென பஞ்சாப் தெரிவித்துள்ளது. (ரா)

## தென்னாபிரிக்கா பற்றிய

# யு.எஸ்.,பிரிட்டிஷ் கொள்கை: ஜிம்மி கார்ட்டர் கண்டனம்

வாஷிங்டன், ஜூன் 22

“இனவெறிகொண்ட தென்னாபிரிக்க அரசுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்” என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.

இப் பொருளாதாரத் தடையினை தாம் முழுமையாக ஆதரிப்பதாகக் கூறிய திரு. ஜிம்மி கார்ட்டர், இத்தகையதடைநடவடிக்கைகளை எதிர்க்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் றீகனையும், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சரையும் வன்மையாகக் கண்டித்துள்ளார். (ரா)

## 2-வது கிரிக்கெட் டெஸ்டில்

# இந்தியா வெற்றிபெறும் வாய்ப்பில் உள்ளது

லண்டன், ஜூன் 22

இங்கிலாந்து- இந்தியாவுக்கிடையில் “லீட்ஸ்” மைதானத்தில் நடைபெற்று வரும் 2 வது டெஸ்கிரிக்கெட்போட்டியில் இந்தியா வெற்றி பெறுவது நிச்சயமாகிவிட்டது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 272ஓட்டங்களையும் 2வது இன்னிங்ஸில் 237 ஓட்டங்களையும் பெற்றது இந்தியா 2 வது இன்னிங்ஸில் ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் பின் துடுப்பெடுத்தாடிய வெங்சக்கார் மிக அபாரமாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 102 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ரோயர்பின்னி சிறப்பாகப் பந்து வீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற 408 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தமது 2வது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்து 3 வது நாள் ஆட்டம் முடிவடையும் போது6 விக்கெட்டுகளைஇழந்து 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

4 ம்நாள் ஆட்டம் இன்று ஆரம்பமாகும். [வி]


# எம் டீ சோப் வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

## 10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றார், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம், ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீல சோப் மேலுறைகளையோ அல்லது ஒரு ‘எம் டீ பார் சோப்’ மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரை பார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்ப வேண்டும்.

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**எம் டீ என்ரபிறைஸ்,** தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




# எம் டீ சோப்

விலை ரூபா 2/- மட்டுமே




தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

(A-744)


## சீக்கியக் குழு பாக்-பயணம்

சண்டிகார், யூன்-22

நானூறுபேரடங்கிய சீக்கியக்குழு ஒன்று பாகிஸ்தான் சென்றுள்ளது.

நேற்று முன் தினம் சென்ற இக்குழு பத்து நாள சுற்றுப் பயணமொன்றினை பாகிஸ்தானில் மேற்கொள்ளும்.

மகாராஜ ரஞ்சித்தின் மறைவு தின நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும் இக்குழு வேறு பல இடங்களுக்கும் சென்று வழிபாடு நடாத்துமென்றும் கூறப்பட்டது.

## கலாசார முக்கோண திட்டம்

கொழும்பு ஞாயிறு

இலங்கையின் கலசார முக்கோணத் திட்டத்திற்கு உலக உண நிறுவனம் 90லட்சம் டாலர்களை வழங்க அனுமதி அளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கற்றதைச் செயலில் பயன்படுத்தாதவன் நிலத்தை உழுதுவிட்டு விதைவிதைக்காதவனைப்போலாவான்.

— இமாம் சாஅதி.

# நமது நோக்கு

## சுபீட்ச வாழ்வை நோக்கி

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளினால் உணவுப் பொருள்களுக்கும், ஏனைய நுகர்ச்சிப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. கிடைக்கும் பொருள்களும் பல மடங்கு விலைகூட்டி விற்கப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் விவசாயநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வழமையாக நெல், மிளகாய், வெங்காயம் பெருமளவில் பயிரிடப்படும் பிரதேசங்களிலிருந்து உழைப்பாளர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். நிலங்கள் தரிசாகிக்கொண்டிருக்கின்றன. போதிய நீர், ரசாயனம், மற்றும் பசளைகள் கிடைப்பது கஷ்டமாகவுள்ளது.

தொடர்ந்தும் தென் பகுதியுடனான பாதைத் தொடர்புகள் பாதிக்கப்பட்டிருக்குமானால் தமிழ்ப் பகுதிகளில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இப்பொழுதே, அன்றாடம் உழைத்து வாழும் ஏழைமக்களில் பலர் தூர இடங்களுக்கு உழைப்புக்காகச் செல்வதை நிறுத்திக்கொண்டுவிட்டார்கள். இதனால் அவர்களின் வீடுகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளை எடுத்துச்சொல்லத் தேவையில்லை.

இதேவேளை தமிழ்ப்பகுதிகளில் குறிப்பாக யாழ் பிரதேச மீனவர் சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள நிலைமை மிகக் கொடூரமானது. ஆழ்கடலில், மட்டுமல்ல கடல் ஏரிப் பகுதிகளில் கால் வைக்கவும் முடியாத நிலைமை. மீன்பிடித்து விற்றும், உணவாகக் கொண்டும் வாழும் இம் மக்கள் அரசு கொடுக்கும் சொற்பநிவாரணத்தை கொண்டு திருப்தியடையும் நிலைமை. மாற்றுத் தொழில்களில் ஈடுபடுவதானால் அதற்கும் வழியில்லாத கொடுமை.

இவ்வாறு பல வகையாலும் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகத் தென்பட்டபோதிலும், இருப்பதைக் கொண்டு மக்களைத் திருப்தி கொள்ளச் செய்யும் கையில் சில பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இன்றைய தேவையாகக் கருதப்படவேண்டும்.

வெளியூர்களிலிருந்து உணவு மற்றும் எரிபொருள்களைக் கொண்டு வரக்கூடியவர்கள் கூடிய அளவு கொண்டுவந்து சேமித்து வைப்பதும், விலைகள் அதிகரிக்காத விதத்தில் அவைகளைப் பகிர்ந்தளிப்பதும் கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

**கிளிநொச்சியில் மோதல் என்றால் ஏற்கனவே இங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஆனைவிலை,** குதிரைவிலையென கூட்டி விடுவது மாபெரும்மோசடி.

சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மக்களை சுரண்டுவதற்கு இது தருணமல்ல. இன்றைய நிலையை மட்டுமல்ல, எதிர்கால நிலையையும் கருத்தில் கொண்டு இத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் செயல்படவேண்டும்.

இன்னொரு வகையில் இங்கு உற்பத்தி செய்யக்கூடிய மக்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் உற்பத்தி செய்யவேண்டும். உற்பத்தியாளர்களுக்குத் தேவையான சகலவித ஊக்கமும் அளிக்கப்படவேண்டும். உற்பத்தியாகும் பொருட்கள் சகல பகுதிகளிலும் பகிர்ந்து விநியோகிக்கப்படவேண்டும்.

''தமிழ்ப் பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும் சுயதேவைப் பூர்த்தியும்'' பற்றிய கருத்தரங்கொன்றை ஆய்வு நிறுவனத்தினர் கடந்த இரு தினங்களாக யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்தியுள்ளனர். விவசாயம், பொருளாதாரம் முதலிய பல்வேறு துறைகளில் அனுபவமிக்க அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியுள்ளனர்.

முதல்நாள் கருத்தரங்கில் நமது உற்பத்தியாளர்கள் கொழும்புச் சந்தையையே நாட்டமாகக் கொண்டு செயல்படுவதுபற்றியும், சுயதேவைப் பூர்த்தியில் நாட்டம் செலுத்தவேண்டியஅவசியம்பற்றியும் பலரும் வற்புறுத்தியுள்ளனர்.

அங்கு வெளியான கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு பிரதேசத்தின் தேவைக்கேற்பப் பயன்படுத்தப்படுமென்று நம்புகின்றோம்.

நிலம் படைத்தவர்கள், தொழிலதிபர்கள், முதலீட்டில் அக்கறையுள்ளவர்கள், இத்துறைகளில் ஆய்வுநடத்துபவர்கள் முதலியோர் கலந்து நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை வகுத்துச் செயற்பட்டால் தமிழ்ப் பிரதேசத்தைப் பயமுறுத்தும் பஞ்சம் பறந்துவிடும். இதில் இளைஞர் சமுதாயத்தின் பங்கினை இடித்துக்கூறத் தேவையில்லை அவர்களே சகலரையும் இயக்க வல்லவர்கள்.

திட்டங்களும் செயற்பாடுகளும் உரியவர்களைச் சென்றடையவேண்டும்.

இப்பிரதேசத்தின் உழைப்பாளர்களான விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் அனைவரும் தமது எதிர்கால சந்ததியின் சுபீட்ச வாழ்வுக்கான பெரும் பணியொன்றில் ஈடுபட்டிருப்பதாக உணரச் செய்யக்கூடிய செயற்திட்டங்கள் தேவை. இவர்களின் சக்தி ஒன்று திரட்டப்பட்டு முறையாகப் பயன்படுத்தப்படுமானால் பிரதேசத்தின் தேவைகளை இலகுவாகப் பூர்த்திசெய்துவிடலாம்.

# ''சமஉரிமை வழங்கப்பட்டுள்ளதால் இந்தியாவில்பிரிவினைகோஷம் எழுவதற்கு வாய்ப்பில்லை''

### ஜூனியர் விகடனில் 'பிரபா'

பிரபாகரனின் விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கொரில்லா யுத்தத்தில் ஈடுபடும்போது ஒரு கால் சிங்கள ராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டாலும், ஒரு சிறு தகவலைக்கூட அவர்களிடமிருந்து கறந்துவிட முடியாது. காரணம் ஒவ்வொரு வீரரும் தன்கூடவே கொடிய விஷமான சயனைட் நிரப்பப்பட்ட சிறுகுப்பி ஒன்றை வைத்திருக்கிறார். தப்பமுடியாத, நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டால் உடனே அந்த விஷத்தை விழுங்கி உயிர்த்தியாகம் செய்துவிடுகிறார்கள்!

இப்படி சயனைட் விழுங்கி இறந்தவர்கள் அந்த இயக்கத்தில் முப்பதுபேருக்கு மேலிருக்கும்! ராணுவ மோதல்களில் உயிர் விட்டவர்கள் எத்தனை பேர்! அவர்களுடைய இயக்கப்புத்தகத்தில் இந்த இளம் கொழுந்துகளின் புகைப்படங்களைப்பார்த்தபோது நம் கைகள் நடுங்கின. உள்ளம் அழுகுரல் எழுப்பியது. இந்த இளம் புகளையெல்லாம் தாங்கிக்கொண்டு தொடர்ந்து கடமையாற்றும் அந்த லட்சியவாதிகளை வர்ணிக்க வார்த்தைகளைத்தேடவேண்டும்.

விடுதலை இயக்கத்தில் பிரபாகரன் சேர்ந்தது ஏன்? அதற்கு பின்னணி? பிரபாகரன் சொன்னார்.

''ஒருநாள் என் அம்மாவிடம் ஒரு பெண்மணி பேசிக்கொண்டிருந்தார். தனது மகள் திருமணத்துக்குப் பணம் திரட்டிக் கொண்டிருந்தார் அந்தப் பெண்மணி என்பது புரிந்தது. அந்தப்பெண்மணியை உற்றுப் பார்த்தேன், அவரது கால் முழுவதும் நெருப்பில் எரிந்து சருகிவிட்டிருந்தது. 1958ல் நடந்த இனக்கலவரத்தில் அவர்களது குடும்பம் நாசமாக்கப்பட்ட கதையை அவர்கள் பேச்சிலிருந்து அறிந்தேன். என் இதயத்தில் அழுத்தமாகப் பதிந்து விட்டது அந்த நெருப்பில் கருகிய கால்கள்! அப்பொழுதெல்லாம் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் செய்திகள்வரும். கூடிக்கூடிப் பேசுவோம். பாணந்துறையில்குருக்களை கொலைசெய்ததைப் பற்றி ஊர் பீதியுடன் பேசியது...... என் இதயத்தை இச்செய்திகள் தாக்கிச் சின்னாபின்னமாக்கும்.

நான் கடைக்குட்டி. வீட்டில் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. வெளியே நடமாட விடமாட்டார்கள். புத்தகம் தன் துணை, நெப்போலியன், அலெக்ஸாந்தர், வீர சிவாஜி நேதாஜி போன்றவர்களின் வரலாறுகளைப் படித்தவாறு இருப்பேன் வெளியே இருந்து என்னைத்தாக்கிய துயரச் செய்திகளும், இந்த வரலாறுகளைப் படிப்பதும் எனக்குள் மாற்றங்களைச் செய்தன.

வல்வெட்டித்துறையில் நிரந்தர ராணுவமுகாம் உண்டு. கள்ளக்குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றை தடுப்பது இந்த ராணுவ முகாமின் நோக்கம். ஆனால் ராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை அநாவசியமாகத் திடீரென்று தாக்குவார்கள். பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் என் உள்ளத்தில் கொதிப்பை ஏற்படுத்தியது.

எமது இளமைப் பருவத்தில் சத்தியசீலன் போன்றோர் ஈழத்தமிழர் நிலைபற்றி எடுத்துரைக்க ஆரம்பித்திருந்தனர். இன்று மேற்கு ஜெர்மனியில் அகதியாக இருக்கும் அவரைப் போன்றோர்தான் இம்மாதிரி இயக்கங்களின் முன்னோடி... தமிழ் ஈழம்தான் தமிழர் துயர்தீர ஒரேவழி என்ற கருத்துக்களை பள்ளிகளில் சில ஆசிரியர்கள் மெதுவாக எடுத்துச்சொல்வதுண்டு....''

பிரபாகரனின் குடும்பத்தை இலங்கை அரசு ஒருகை பார்க்காமலா இருக்கும்? அவரது வீடு இடிக்கப்பட்டது. அப்பாவுக்கு பென்ஷன் மறுக்கப்பட்டது. நாடோடியாகத் திரியவேண்டிய கதி ஏற்பட்டது அவருக்கு.

போராட்ட வாழ்வின் நடுவே பிரபாகரன் திருமணம் புரிந்துகொண்டிருக்கிறார். மனைவி பெயர் மதிவதனி. தன் ஒரே குழந்தைக்கு 'சார்லஸ் ஆண்டனி' என்று பெயரிட்டிருக்கிறார் இதற்கு ஒரு காரணம் உண்டு.

*ஜூனியர் விகடன் சஞ்சிகை நிருபருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு வே. பிரபாகரன் அளித்த பேட்டியின் மூன்றாம் பகுதியை இங்கு தருகின்றோம்.*

பிரபாகரனின் உயிர்த் தோழராக சார்லஸ் ஆண்டனி என்பவர் இருந்தார் தமிழர்களுக்காகப் போராடிய அந்த வீரரை இலங்கை ராணுவம் சூழ்ந்துகொண்டு வீழ்த்தியது பிரபாகரன் கோபம்கொண்டார். ஆண்டனியின் உடையை அணிந்து கையில் துப்பாக்கியோடும், கண்களில் தீப்பொறியோடும் பாய்ந்து வெளியே சென்று இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பதின்மூன்று பேரை அழித்துப் பழிவாங்கினார். அவர் நினைவாகத்தான் குழந்தைக்குப் பெயர்.

பிரபாகரன் 'கொரில்லா' ('கெரில்லா' தான் சரி. ஆனால் எப்படியோ தமிழில் 'கொரில்லா' என்று வழக்கத்துக்கு வந்துவிட்டது!) பயிற்சியைக் கியூபாவில்பெற்றதாகச் சொல்வார்கள் அதைப் பற்றிக் கேட்டபோது, ''அப்படி வெளியே பேசப்படுவது உண்மையல்ல புத்தகங்களைப் படித்து நானாகவே பயின்றேன். கற்பதன் மூலம் தெரிந்து கொள்வதை விடச் சுற்றியிருக்கும் 'ஆபத்து' நமக்கு அதிக பயிற்சியைக் கொடுக்கும் எனக்கு 'ஆபத்து' தான் குரு...''

—சிரித்தார். சாதாரண துப்பாக்கியிலிருந்து நவீன ஆயுதங்களை இயக்குவதுவரை கைதேர்ந்தவர் பிரபாகரன்

பிரபாகரனுக்கு ஓவியம், கார்ட்டூன் வரைவதில் ஆசையுண்டு. இயற்கைக் காட்சிகளும் வரைவார். ''எங்கே, ஏதாவது படம் போடுங்களேன்'' என்று கேட்டோம்.

ஸ்ரீலங்கா ராணுவத்தையே எதிர்த்துத் திறணவைக்கும் பிரபாகரன் சற்றுத் தயக்கத்துடன், ''நீங்கள் எதிரே இருப்பதால் பயமாக இருக்கிறது'' என்றார் மதனைப் பார்த்து.

பிறகு சில படங்களைக் குட்டியாகப் போட்டுக் காண்பித்தார். எந்தப் படத்தையும் 'நீற்றாக' முடித்துவிட்டுத்தான் தலையை நிமிர்த்தினார்.

ஒருகாலில் நிற்கும் கொக்குப் படத்தை ஒரு நிமிடம் எடுத்துக்கொண்டு போட்டார்.

''இந்தப் படத்தில் ஒரு தவறு இருக்கிறது'' என்றார் மதன். ''என்ன?'' என்று ஆவலுடன் கேட்டார் பிரபாகரன்.

''கொக்கின் கால் இப்படி உட்பக்கமாக மடங்காது'' என்றார் மதன்.

''அப்படியா...'' என்று சிரித்த பிரபாகரன், ''எத்தனையோ பிரச்னைகள்... இனிமேல் கரெக்ட் சப் போடுவேன்...'' என்றார் மதன் போட்ட திருத்தப் படத்தைப் பார்த்தவாறு.

விடைபெறவேண்டிய நேரம் வந்தபோது தமிழ் ஈழம் பற்றி மீண்டும் பேச்சுத் திரும்பியது. ''தமிழ் ஈழம் பெறும் நாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்குமென்றால் ஈழத்தை அடைவது பெரிய விஷயமல்ல'' என்றார்.

தன்னைச் சிலர் 'இந்திய எதிரி' என்று வர்ணிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்தக் குற்றச்சாட்டைத் திட்டவட்டமாக மறுத்தார் பிரபாகரன்.

'இந்திய இராணுவம் நடவடிக்கையில் இறங்குவதில் உள்ள சிரமம் எங்களுக்குப் புரிகிறது அதனால் இந்தியாவைச் சர்வதேச நாடுகள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடியநிலைமை ஏற்படலாம்...

''தனி ஈழம் அமைக்கச் சம்மதித்தால் அது தமிழ் இன நாடாக அமைந்து இந்தியாவிலுள்ள தமிழ்நாடு பிரிவினை கோரும் கட்டம் வரலாம் என்று சில இந்தியத் தலைவர்கள் முன்பு கருதினார்கள். தனி ஈழம் தமிழ் நாட்டுப் பிரிவினையைத் தூண்டிவிடும் என்பது அபத்தம். இந்தியா என்ற மாபெரும் நாடு உலகத்துக்கே வழிகாட்டும் அற்புதமான நாடு உலகமே வியக்கும் விதத்தில் இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடக்கின்றது மக்கள் குரலுக்குத் தலைவணங்கும் ஆட்சி நடக்கிறது சமஉரிமைகள் வழங்கப்பட்டுள்ளன... இந்நிலையில் பிரிவினைக் கோஷம் இனி இந்தியாவில் எழுவதற்கே வாய்ப்பில்லை...''

— பிரபாகரன் பேசியபோது கிடைத்த முத்தாய்ப்புகள் இவை...!

—ஜூனியர்விகடன் நிருபர்.

## ''ஆங்கிலப்போட்டிகள் மாணவரின் ஆங்கில அறிவில் தரத்தை உயர்த்தும்''

யாழ்ப்பாணம், திங்கள்

''ஆங்கில மொழி உலக மக்கள் அனைவரதும் அபிமானத்தைப்பெற்ற மொழியாகும் ஆங்கிலம் ஒரு பாடமாகப் பாடசாலை நேரசூசியில் இடம் பெற்றுவிட்டால் மட்டும் வளர்ச்சி அடைந்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆங்கில மொழி சம்பந்தமான பேச்சு, கட்டுரை நாடகம் முதலியவற்றிலான போட்டிகளை நடத்துவதினால் மாணவரிடையே ஆங்கில மொழியின் தரம் உயர்வுறும் என்பது உண்மையாகும்.''

கோப்பாய் சரவணபவானந்த வித்தியால ஆங்கில மொழித்தின விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. மு. நல்லையா இவ்வாறு தெரிவித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகக்கிண்ண" உதைபந்தாட்டம்:

# பிரேஸில் கோஷ்டி தோல்வி! மே. ஜெர்மனி வெற்றி

மெக்ஸிக்கோ, ஜூன் 22

மெக்ஸிக்கோவில் நடைபெறுவரும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் இதுவரை தோல்வி அடையாது முன்னணியில் நின்ற பிரேஸில் கோஷ்டி தோல்வி அடைந்து விட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கால் இறுதிப்போட்டியில் பிரான்ஸும், பிரேஸிலும் மோதிய கடும் போட்டி முடிவில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அப்போது இரண்டு கோஷ்டிகளும் தலா ஒருகோலைப் போட்டிருந்தது.

இதன் பின் "பெனல்டி பிறேக்" மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது. இதில் பிரான்ஸ் 5 கோல்களையும், பிரேஸில் 4 கோல்களையும் போட்டதினால் பிரான்ஸ் வெற்றி பெற்று "அரை இறுதி" ஆட்டத்துக்கு விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

## மேற்கு. ஜெர்மனி வெற்றி

மேற்கு ஜெர்மனிக்கும்-மெக்ஸிக்கோவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியிலும் பலம் கொண்ட மெக்ஸிக்கோ கோஷ்டி தோல்வி அடைந்து விட்டது.

மேற்படி இரு கோஷ்டிகளின் ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த பின் "பெனல்டி பிறேக்" வழங்கப்பட்டது இதில் மே. ஜெர்மனி 4 கோல்களையும், மெக்ஸிக்கோ ஒரு கோலையு போட்டது. மே ஜெர்மனியின் கோல்காப்பு வீரர் சுமாக்கரின் அபார விளையாட்டினாலேயே மே ஜெர்மனி வெற்றி பெற்று "அரை இறுதி" ஆட்டத்துக்கு விளையாடத் தெரிவானது. (வி)

# இராணுவத் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்தாவது நபரும் பலி

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' மற்றும் பீரங்கித் தாக்குதலில் இ போ. ச. டிப்போ ஊழியர் ஒருவர் உட்பட பலர் படுகாயமடைந்தனர் இச் சம்பவத்தின்போது கிளிநொச்சியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரது மனைவியும் படுகாயமடைந்தார்

இதே வேளை திருநகர் தேடுதல் வேட்டையின் போதும் பலர் பலியாகியுள்ளன. தன்னிந்திய திருச்சபையின் சுன்னாகம் இறையியல் கல்லூரி மாணவன் மிசுகல் ஞானப்பிரகாசமும் திருநகர் துப்பாக்கிச் சூட்டினால் மரணமானார்.

மரணமான ஞானப்பிரகாசத்தின் இரு சகோதரர்கள் ஏற்கனவே இராணுவத் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியுள்ளனர். இவரது உறவினர்களில் இதுவரை பத்து பேர் வரை கிளிநொச்சி திருநகரில் இராணுவ துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி மரணமாகி உள்ளனர்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 9 [1986-6-23]
கிழமை: திங்கள்
திதி: பிரதமை
காலை 7-27ன் மேல் துதியை
நட்சத்திரம்: பூராடம்
மு. இ. வரை

மேடம்: புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் உண்டு காதலர்களுக்கும் கனகுஷியான தினம் தொழில் விருத்திக்குமிடமுண்டாம். சுபதினம்.

இடபம்: அரச பயத்திற்கு இடமுண்டு. வீண் விவாதங்களுக்கு இடமளியாதிருக்கவும். தொழில் துறையிலும் நஷ்டத்திற்கு இடமுண்டு. அவதானம் நன்று.

மிதுனம: களஸ்திரவழிப் பெருமையுமுண்டு மேலிடத்து ஆதரவுமுண்டு. தொழில்வாய்ப்புக்கு இடமேற்படலாம்.

கடகம்: புதியவாழ்க்கைக்கு வழிகோலப்படலாம் தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றக்கூடும். அக்கினி ஆயுதபீடைக்குமிடமுண்டு குடும்பத்திலும் பூசல்கள் தோன்றி மறையலாம். தெய்வ வழிபாடு நன்று.

சிங்கம்: பிதாவழிப்பொருள் வரவுமுண்டு. பிரயாணமொன்றுக்கும் இடமேற்படலாம். கலைஞர்கள் போற்றப்படுவார்கள். பெரியோர் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்,

கன்னி: இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம். நினைத்த காரியம் கைகூடும். மனைச்சிறப்புமுண்டு. முன்னேற்றமான தினம்.

துலாம்: புதிய நண்பர்களும் தேடிவருவார்கள். நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். சுற்றுடலிலும் மதிப்பு உயரும். வாழ்வும் இன்று மலரும்.

விருச்சிகம்: பொருளாதார நிலையில் நெருக்கடி தோன்றும். அவப்பெயர் கேட்கவும் நேரிடலாம் குடும்பத்தில் தொல்லைகளுக்கு இடமுண்டு. முன்யோசனை நன்று.

தனுசு: சிலரின் புனைதுரைகள் மனதைப் புண்படுத்தும், வீண் செலவுகளுக்குமிடமுண்டு குடும்பத்திலும் இடைக்காலப் பிரிவுக்குமிடமுண்டு நிதானம் நன்று

மகரம்: எதிர்காலம் இன்று பிரகாசமடையும் உறவுமுறைகளும் பலப்படும். தொழில்புரியும் இடத்திலும் நன்மை பயக்க வாய்ப்பு ஏற்படலாம். எவ்விடயத்திலும் திருப்தி காணப்படும்.

கும்பம்: சகோதர மனச்சஞ்சலமும் ஏற்படலாம். வாகனம செலுத்துவோர் அவதானம் வேண்டும். கடன்தொல்லைகளும் ஏற்படலாம். முன்னெச்சரிக்கை நன்று

(7ம் பக்கம் பார்க்க)

கடற்றொழிலாளர் மரண விசாரணை:

# மூன்று சடலங்களில் சன்னங்கள் எடுக்கப்பட்டன

யாழ்ப்பாணம், திங்கள்

30 குருநகர் கடற்றொழிலாளர்களின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த சட்ட வைத்தியஅதிகாரி என். சரவணபவானந்தன் மூன்று சடலங்களில் எடுக்கப்பட்ட சன்னங்களை பொலிசாரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவித்தார்.

யாழ். மேல் நீதிமன்றக் சட்டடத்தில் யாழ். பதில் நீதிவான் கே. பி எஸ். வரதராஜா முன்னிலையில் இம் மரண விசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகளான ஆர். விஸ்வநாதன் எஸ். தவபாலன் ஆகியோர் ஆஜரானார்கள்.

ஒன்பது சடலங்கள் மீது பிரேத பரிசோதனை நடாத்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியரும் சட்ட வைத்திய அதிகாரியுமான என். சரவணபவானந்தன் வைத்திய அறிக்கை சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

இம்மரண விசாரணை மறுநாள்தொடர்ந்து நடைபெற்ற போது இறந்தவர்களின் நலனை கவனிக்கமேலும்சட்டத்தரணிகளான ஏ அன்ரனி, எஸ், கனகசபாபதி ஆகியோர் ஆஜரானார்கள்.

சடலங்கள் அடையாளம் காணப்பட்டது தொடர்பாக இறந்தவர்களின் உறவினர்கள் சாட்சியமளித்தனர். விசாரணை இன்று காலைவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது (க)

## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் சுகிதன் (சுகி)

வேலணை கிழக்கு செல்வநாயகம் வீதியைச்சேர்ந்த சி செ தணிகாசலம்-சல்ஞாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் சுகிதன் (சுகி) தனது இரண்டாவது பிறந்த தினத்தை கொழும்பு-15, S. D பெர்ணன்டோ மாவத்தையிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார் இவரை வேலணை கிழக்கு தவிடு தின்னிப் பிள்ளையார் அருள்பெற்று கல்வி, செல்வம் வீரம் நிறைந்தவனாக அருமைக்குல விளக்கை நீலக்கடல் அலைபோல் நீடூழிவாழ்கவென ஆசை அப்பா, அருமை அம்மா, அன்பு உற்றார், உறவினர்கள் வாழ்த்துகிறார்கள். (C 3019)

கிளிநொச்சி கச்சேரி இடமாற்றம்

# ராணுவம் ஆட்சேபம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சி கச்சேரி வேறு இடத்திறகு இடம் மாறுவதற்கு இராணுவ தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் மேலதிக அரச அதிபர் எஸ். அமிர்தலிங்கம் உட்பட உத்தியோகத்தர்கள் பலர் கிளிநொச்சி கச்சேரிக்கு வருகை தந்திருந்தனர். கிளிநொச்சியில் நிலவிய பதற்ற நிலையைத் தொடர்ந்து கச்சேரி மற்றும் அரச திணைக்கள ஊழியர்கள் வரவு இடாப்பில் ஒப்பமிட்ட பின் திரும்பினார்கள்

கிளிநொச்சி நகரில் தொடர்ந்து பதினெட்டாவது நாளாக சனநடமாட்டமின்றி மயான அமைதி நிலவுகின்றது. (க)

# அகதிகள் நிவாரண நிதிக்கு ஆதரவு வழங்குவீர்

யாழ்ப்பாணம் ஞாயிறு

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீபத்தில் ஆயுதப் படையினரின் வெறியாட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கும் பணியில் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களின் ஆதரவுடன் ஈடுபட்டுள்ளார்கள்.

தேவைப்படும் நிதியைப் பெற்றுக்கொள்ளு முகமாக இன்று தொடக்கம் (திங்கட்கிழமை 23-6-86) புதன்கிழமை வரையும் 25-6-86) பொதுமக்களிடம் சேகரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டுப் பொதுமக்களிடம் மாணவ்வரவைப் பற்றுச்சீட்டுடன் வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முழுமையான ஆதரவு வழங்குமாறு மேற்படி அவையினரால் கேட்கப்பட்டுள்ளது.

## மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமைபகல் விசேட அபிஷேகங்களும் மாலை ஆறுமுகப் பெருமான் ஆரோகண பஞ்ச உலாவும் நடைபெறும். [மெ]

## பரிசாரகர்களாக நியமனம்

வேலணை ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய சிறு பணியாளர்கள் 32 பேர்கள்ப் பயிற்சி பெற்ற பரிசாரகர்களாகத் தெரிவு செய்யப்பட்டு நியமனங்களைப் பெற்றுள்ளார்கள்.

தமிழ் பிரதேசத்தில் இருக்கும் ஒரேயொரு போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் தான்.

இப்போதனா வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டதில் இருந்து முதன்முதல் இப்பதவிகளுக்குத் தோற்றிய 32 பேர்கள் ஒரே தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, ஞாயிறு

அறவழிப் பேராட்டக்குழு நடாத்தும் பாலர் பாடசாலைகளுக்கிடையிலான கலாசார நிகழ்ச்சிகளின் இறுதிப் போட்டிகளும் பரிசில் வழங்கும் வைபவமும் இம் மாதம் 28ம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் 25 பாலர் பாடசாலைகள் பங்குபற்றுமெனத் தெரியவந்துள்ளது. (க)

Enjoy Life – it is worth Living!

HOTEL GNANAMS

Coffee Shop
Executive Lunch
(Soup, Rice and Curry and Desert) Rs. 23/-
Chinese Meals
Ranging from Rs. 25/- to Rs. 40/-
A/C or Non A/C Rooms
Ranging from Rs. 50/- to Rs. 200/-
Beer Garden
(Exotic Tasty Short-Eats)

HOTEL GNANAMS
299, CLOCK TOWER ROAD, JAFFNA;
Tel: 22082 — 23067
Open Daily - from 9.30 a.m. to 11.30 p.m;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவத்தின்போது 'நாவலரின்' செயற்பாடுகளை சித்தரிக்கும் சிற்பக்கண்காட்சி

மண்டைதீவு, ஞாயிறு

"நாவலர் பெருமானின் வரலாறுகளையும், செயற்பாடுகளையும், சித்தரிக்கும் வகையிலான சிற்பங்களைக் கொண்ட கண்காட்சியொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் நல்லூர் உற்சவத்தையொட்டி இடம்பெறவிருக்கும் இக கண்காட்சியை நாவலர் சபையும், யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாவலர் பெருமான் தொடர்பான விடயங்கள் பற்றி இந்து விடுதியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இக் கண்காட்சி தொடர்பான ஆலோசனையை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன்வைத்தது.

நாவலர் சபையின் உப தலைவர் திரு சி. வி. கே. சிவஞானம், இச்சபையின் செயலாளர் திரு. எஸ். சோமகாந்தன் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு தி சி. சண்முகலிங்கம் ஆகியோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் நாவலர் பெருமான்வாழ்ந்த இடத்தில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தின் நாவலர் பிரிவில் இக்கண்காட்சியை நடாத்துவதெனவும், நல்லூர் வருடாந்த உற்சவகாலத்தின் போது தொடர்ந்து 15 தினங்கள் இக்கண்காட்சியை நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நாவலர் பணிகள், அவரது வரலாறுகள் கொண்ட சரித்திரத்தைச் சித்தரிக்கும் வகையில் சிற்ப உருவங்களைக் கொண்டதாக இக்கண்காட்சி இடம்பெறவுள்ளதால் சிற்பக் கலைஞர்களது ஆலோசனைகளையும், ஆதரவையும் பெறுவதென்றும் இக்குழு முடிவுசெய்தது.

## விவசாய செய்திப் பலகை

யாழ்ப்பாணம் - ஞாயிறு

மானிப்பாய் இந்துக்கலலூரியில் விவசாய செய்திப் பலகை ஒன்று அண்மையில் தொழில் அதிபர் திரு. க. கனகராசாவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு.சி.வே. மகேசவேலு, திரு. கனகராசா ஆகியோர் குத்துவிளக்கேற்றிய பின்னர் கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

கூட்டத்தில் கல்லூரியின் இந்து சமயச் செயலாளர் திரு. பி. தம்பாப்பிள்ளை, விவசாய விஸ்தாப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். சிவநேசன், கல்லூரியின் உயர்பிரிவு ஆசிரியர் திரு. எஸ். கதிர்காமநாதன் ஆகியோரும் உரையாற்றினர். விவசாய செய்திப் பலகையை திரு. க. கனகராசா அன்பளிப்புச் செய்திருந்தார். [க]

# வாகனங்கள் பலத்த சோதனை

[முல்லைத்தீவு, ஞாயிறு]

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களினால் யாழ். குடாநாட்டுக்கும் ஏனையபகுதிகளுக்குமான போக்குவரத்துச் சேவைகள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளன.

கொழும்புசெல்லும் தனியார் பஸ், லொறிபோன்ற வாகனங்கள்யாவும் முல்லைத்தீவு ஊடாகவே செல்கின்றன.

இவ்வாகனங்கள் முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான், ஓமந்தை, வவனியா, ஆனையிறவு போன்ற இடங்களில் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

## வல்வை மக்கள் வங்கி

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அண்மையில் வல்வையில் நடந்த 'பொம்பர்' குண்டுத் வீச்சில் சேதமடைந்த வல்வை மக்கள் வங்கி இயங்க முடியாத நிலையில் உடுப்பிட்டி பல நோக்கக் கூட்டுறவு சங்க சமாஜத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

வல்வைப் பிரஜைகள் குழுவினரதும் வங்கி வாடிக்கையாளர்களதும் பெரு முயற்சியினால் வங்கியை வல்வெட்டியில் பழைய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் நடந்து முடிந்துள்ளதால், அடுத்த வாரம் முதல் வல்வைமக்கள்கவங்கிக் கிளைவல்வெட்டியில் இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

## போராளிகள் எதிர்த்தாக்குதல்

யாழ்ப்பாணம், திங்கள்.

கிளிநொச்சி - கனகராயபுரம் பகுதியில் குண்டு வீச்சிலீடுபட்டிருந்த விமானங்களையும் துப்பாக்கிப்பிரயோகம் செய்த ஹெலிகொப்டரையும் நோக்கி போராளிகள் எதிர்த் தாக்குதல் நடாத்தியதால அவை மேல் நோக்கிப்பறந்து முகாம்களுக்குத் திரும்பிவிட்டன

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஒன்றியக் கூட்டம்

சுண்டுக்குளி ஞாயிறு.

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் ஒன்றிய அமைப்பின் கீழ் ஆனைக்கோட்டை உள்ளூராட்சிப் பகுதிக்குட்பட்ட சன சமூக நிலைய ஒன்றியத்தின் கூட்டம் அண்மையில் உள்ளூராட்சி மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டம் நவாலி முரசொலி சன சமூக நிலையத்தில் நடைபெற்றது என்று இம் மாதம் 9 ம் திகதி வெளிவந்த செய்தி தவறானதாகும்.

# விபரம் தந்துதவுமாறு மாணவர் அவைவேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதாகி பதினெட்டு மாதங்களுக்குமேல் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எவர்மீதாவது உயர்நீதிமன்றத்தில் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படாதிருந்தால் அதுபற்றிய விபரத்தினை உடனே தந்துதவுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை தெரிவித்துள்ளது.

மேலும் அவர்பற்றிய பெயர், விலாசம், பாதுகாவலர் பெயர், கைதான திகதி, முகாம்களின் விபரம், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலம் போன்ற விபரங்களையும் கடிதமூலமாகவோ நேரடியாகவோ "மாணவர் அவை" யாழ். பல்கலைக்கழகம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## ஆனையிறவில் 'ஷெல்' தாக்குதல்

கிளிநொச்சி, ஞாயிறு

ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து பரந்தன், கிளிநொச்சி முதலான பகுதிகளை நோக்கி பரந்த அளவில் 'ஷெல்' பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் சில கட்டிடங்கள் சேதத்திற்குள்ளாகின. பலர் காயமடைந்திருக்கலாம் என்றும் சிலர் மரணமாகி இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

## சீனிவிலை மாற்றமில்லை

கொழும்பு, சனி

சீனி விலையில் எந்த வித மாற்றமும் செய்யப்படவில்லையென அரசு தெரிவித்துள்ளது.

வழமையான விலையில் சீனியை விநியோகிக்குமாறு வர்த்தகர்களை அரசு கேட்டுள்ளது. (து)


## பிரயாண ஒழுங்குகள்
### டென்மார்க்

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

(25-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள்
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND. ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(C 2991)



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்

செல்ல விரும்புபவர்கள் உடன்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

26-ம் 30-ம் திகதிகளில் உங்களை எமது பிரதிநிதி
ஒருவர் உடன் அழைத்துச் செல்ல உள்ளார்.
அத்துடன்

★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கும் எமது பிரதிநிதி
வெகுவிரைவில் அழைத்துச் செல்ல உள்ளார்.
மற்றும்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற், விசா
என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**லிப்ருஸ் லிமிற்ரெட்**

R. G. கட்டடம், இல.70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2 nd Floor, York Building, No: 94 1/7, York Street, Colombo — 1
Tele. No: 25508

[A-743]



## விஷேட அறிவித்தல்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களால் 272 (352) நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டது. தற்பொழுது எமது ஸ்தாபனம் 23-06 86 திங்கட்கிழமைதொடக்கம் 248, கே. கே. எஸ். வீதி, என்னும் முகவரியில் தொடர்ந்து இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட முகவரியில் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,**
248, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23732. [A-860]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க், ★ கனடா

ஆகிய நாடுகளுக்கு உடனடியாகப் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.

லிபியா, சவூதி அரேபியா, குவைத்,
சிங்கப்பூர் (பணிப் பெண்கள்)
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்கு.

தொடர்பு கொள்க:

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,**
"பிரசாந்தி வைத்திய நிலையம்",
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு.
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கை)
[C-3022]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண
ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா
செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள்
இம்மாதம் 25ந் திகதிக்கு முன்
தொடர்புகொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**மீனம்:** அன்னைவழி ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். தானிய விருத்தியுமிண்டு. நீர்த்தொழில் புரிவோர்க்கு மகிழ்ச்சியுண்டு. வாகன நலனுமுண்டு. வரவில் திருப்தியுமுண்டாம்.

திருமலை ரவீந்திரன்


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இரத்தினம் வரதராசா**
(சீமேந்துக்கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

அன்னையின் மடியில்: 19-09-1949

ஆண்டவன் திருவடியில்: 27-06-1983

அன்பின் திருவுருவே பண்பின் பைங்கிளியே நகைச்சுவையின் நாயகனே செல்வத்திருமகனே செதுக்காத பொற்சிலையே கருணையுடன் பார்க்கும் உமது கண்கள் மீளாத் துயரத்தால் மூடியதோ அசைகின்ற உம் அன்புக்கரங்கள் அசைய மறுத்தனவோ மலர்கின்ற உம்முடைய புன்சிரிப்பும் உதிர்ந்ததுவோ கணீர் என்று ஒலிக்கும் உம்முடைய குரலோசை காற்றோடு கலந்ததுவோ அரவணைத்த உம்தாயார் பரிதவிக்க உறவினர் உள்ளங்கள் உருக்குலைய உடலால் மறைந்தாலும் உள்ளத்தால் மறையாத மரகதமே, மாணிக்கமே தனிமகனே உன்பிரிவைத் தாங்காது வெடிக்குது ஐயா எம் இதயம் பொன்னுன உம்பூவுடல் மறைந்தாலும் பெயரும் புகழும் அழியாது எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் வாழ்ந்துகொண்டே இருக்கும் என்றும் பெயரும் புகழும் பெற்ற எங்கள் அன்புச் செல்வ வரதராசாவே.

உங்கள் பிரிவால் வாடும்:

ஐயா, அம்மா,
பிள்ளைகள், தம்பி,
தங்கைமார், மாமன்மார்,
மாமிமார்,
மைத்துனர்மார்,
மருமக்கள் மற்றும்
உறவினர்கள்.

கல்வத்தை வீதி,
காங்கேசன்துறை.
(C 3016)



**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(கலர்)


## பண்டிதமணி பாராட்டிய பெரியார்

கல்விமான் பக்திமான்சிறந்த உரையாசிரியராக விளங்கிய பெருமை அமரவாழ்வு எய்திய எங்கள் சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசுவைச் சாரும். 8-6-86 ஞாயிறு இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார்.

கந்தபுராண யுத்தகாண்ட உரைநூல் கந்தரநுபூதி உரைநூல் இரண்டும் இவரை என்றும் எமக்கு நினைவுபடுத்தும். நூலின்கருத்துக்கள்ஆசிரியரின் கல்வி அறிவின் ஆழத்தை எமக்கு நன்கு புலப்படுத்துகின்றன. உரையாசிரியர் மரபுக்கு மேலும் சிறப்படையும் வகையில், ஒழுக்கம், தூய்மை கல்வி ஆகியன இவரது மேன்மைக்கு அணிகலனாக அமைந்தன.

ஆலயங்களில் பஞ்சபுராணம் கூறுபவர்கள் மரவு எவ்வகையில் அமைய வேண்டும் என்பதை அமரர் யோகி கா. கார்த்திகேசு எமக்கு வழிகாட்டிச்சென்றுள்ளார். சுழிபுரம் பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வசந்தமண்டபத்தில் சண்முகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை, திருவிழா ஆகிய காலங்களில்நடைபெறும் பூசைகிரிகை வழிபாடுகளைத்தொடர்ந்து பஞ்சபுராணம் ஓதும் நிகழ்ச்சி நடைபெறும் அவ்வேளையில் சென்ற அரை நூற்றாண்டு காலமாக யோகியே அப்பணியை மேற்கொண்டுவந்தார். இவர்வசந்த மண்டப வாசலில் நின்று தலையில் கைவைத்து கூப்பிய வண்ணம் அழகாக பண்ணுடனும் பக்தியுடனும் ஓதிமுடிக்கும் காட்சி யாவரையும் மெய்சிலிர்க்கவைக்கும்.

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் நடைபெற்றுவரும் புராணபடனம் தமதுகாலத்தில் எவ்வித தடையும் இல்லாது நடைபெற வேண்டும் என்ற பேரவாவுடன் பணியாற்றினார் யோகியார். பெரியபுராணத்தில் மூழ்கித்திளைத்த சம்பவங்கள் பலவாகும். சென்ற இரண்டு மாதங்களுக்குமுன் நடைபெற்ற ஆனாதிநாயனார் புராணம் படிக்கும் வேளையில் பாடலை வாசித்தவர் தவறுதலாக நூலின் தாழ்களை புரட்டி வேறுபாடல்களை படித்துவிட்டார். உடனே உரையாசிரியர் தவறவிடப்பட்ட பாடல்களை படித்து இவற்றை வாசியும் என்று தெரிவித்தார். அப்போதுதான் பாடலை வாசித்தவர் விட்டதவறை தெரிந்துகொண்டார். இந்நிகழ்ச்சியிலிருந்து பெரியபுராணச் செய்யுள்யாவும் இவர் நன்கு மனனமாக வைத்திருந்ததை அறியமுடிந்தது.

கீரிமலை சிறுப்பர் மடத்தில் நடைபெற்ற புராணபடன வைபவம் ஒன்றில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையுடன் யோகியாரும் உரைசொல்லும் வாய்ப்புக்கிட்டியது. யோகியாரின் உரையைக் கேட்ட பண்டிதமணி மிக வியந்து பாராட்டி மகிழ்ந்த சம்பவமும் நிகழ்ந்தது.

க. வாமதேவன்

## ஆங்கிலப் போட்டிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொத்தணி அதிபர் திரு. பூ.க. இராசரத்தினம் பேசுகையில், ஆங்கிலம் உலகப் பொது மொழி என்ற அந்தஸ்தை எப்பொழுதோ பிடித்து விட்டது என்றும் பாடசாலை மாணவரின் ஆங்கில மொழித் திறமையை வளர்ப்பதன் பொருட்டு ஆங்கில மொழித் தின விழாவைப் பாடசாலைகள் தோறும் நடத்துவது அவசியமென்றும் கூறினர்.

மாணவர்களின் ஆங்கில நாடகம், அபிநயப்பாடல்கள், மனன ஒப்புவித்தல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஆசிரியை திருமதி யோ. [illegible] சிறப்புரை நிகழ்த்தினர். [க]

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் ஞாயிறு

தெல்லிப்பழை தென்மேற்கு கொப்பளாவுடை மயானத்தின் அபிவிருத்தி கருதி மயான பரிபாலன சபைஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதன் நிர்வாகிகள்வருமாறு தலைவர் திரு. எஸ் ஆர். சண்முகத்தினம் செயலாளர் திரு நா. போஜன், பொருளாளர் திரு. க. திருநாவுக்கரசு, உபதலைவர்கள் திரு க. சிதம்பரப்பிள்ளை, திரு. வி சண்முகநாதன், எண் பரிசோதகர் திரு சி. கைலைமகான் 11பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது.

0 0 0

கைதடி அருள்மிகு கயிற்றசிட்டி கந்தசாமி கோவிலுக்கான புதிய பரிபாலன சபை ஒன்று இம்மாதம் முதலாம் திகதி அமைக்கப்பட்டுள்ளது.

இப் புதிய பரிபாலனசபையின் போசகராக ஆலயத்தின் முன்னாள் முகாமையாளரின் மகன் திரு. வி. கனகசபாபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. சி. கனகரத்தினம், செயலாளர் திரு இ. வேலாயுதர், பொருளாளர் திருமதி வி. இராமலிங்கம் மற்றும் 15 பேர் கொண்ட நிர்வாகசபையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

0 0 0

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஸ்தாபன நிர்வாகக் கிளை அண்மையில் அமைக்கப்பட்டது. இக் கிளையின் போஷகராக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரையும் தலைவராக வைத்திய கலாநிதி இராதாகிருஷ்ணனும், உபதலைவராக திரு கே. தில்லைநாதனும், செயலாளராக செல்வி பவானியும், உப செயலாளராக திரு. எஸ், இராசேந்திரமும் இணைப் பொருளாளர்களாக செல்வி மாலினி திரு. எஸ். குலோத்துங்கம் ஆகியோரும் பத்திரிகையாசிரியராக செல்வி பத்மாவதியும் தெரிவாகினர். நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய செல்வா சனசமூ கநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்:-

காப்பாளர்கள்; சி. இராமநாதன், திரு, சி. இராசதுரை திரு. அ. சதாசிவம் தலைவர்: திரு, க. தங்கலிங்கம், உபதலைவர்: திரு. இ. சிவானந்தலிங்கம், செயலாளர்: திரு. இ. அருணாசலம் உப செயலாளர்: திரு. இ செல்லக்கொடி, பொருளாளர்கள்: திரு. மு. இரத்தினவடிவேல், திரு வ ஜெயபாலசிங்கம். 6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

0 0 0

அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் கோயில் வழிபடுநர்சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

போஷகர்: திரு. க. சிவனடியான், தலைவர்: திரு. மு. குமாரசாமி, உபதலைவர்: திரு. க. ஆறுமுகம், செயலாளர் திரு. வ. பரம்சோதி, பொருளாளர்: திரு. பே. கணபதிப்பிள்ளை. 7பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

நவாலி முரசொலி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பெற்றனர்:-

தலைவர்: திரு. அ. சி. ஜெயரத்தினம், உபதலைவர்: திரு. சாம் டிக்சன், செயலாளர் திரு. தி. பொ. அற்புதநாதன், உபசெயலாளர்: திரு. வே. பாலநாதன், பொருளாளர்: திரு. வே. பத்மநாதன் உபபொருளாளர்: திரு. சு. தியாகராசா, கணக்காய்வாளர், திரு கிறிஸ்டிபோல் போஷகர்கள்: திருவாளர்கள் என். ரி. முருகேசு, நா. செல்லத்துரை, செயலாட்சியாளர்: திரு. தேவதாசன் ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரியப் பெற்றனர்

0 0 0

அஞ்சல் தொலைத்தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக் சழக நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர், திரு. ஏ. கந்தசாமி, உபதலைவர்கள்; திரு ரி சோகசுந்தரம், எஸ் சிவலோகசுந்தரம் செயலாளர்: இ. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்: ஏ. வேல்முருகு, கே. நவரத்தினம் தனாதிகாரி: ஈ. எல், தியாகராசா, உபதனாதிகாரி: வி, சிவப்பிரகாசம் நிர்வாக அங்கத்தவர்களாக ஒன்பதுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [சிவ]

# அன்ரனு இல்லாமல் தெளிவான தொலைக் காட்சி

புதுடில்லி, ஜூன் 22

அன்ரனு இல்லாமல் தெளிவான படங்களை தொலைக்காட்சிப் பெட்டியில் பார்க்கும் புதிய முறையை டில்லிப் பல்கலைக்கழக மாணவர் திரு. நந்தன் அறிமுகப்படுத்தியுள்ளார். இவரது புதிய செயல்திட்டப்படி அன்ரனு வயர்களை பச்சை மரமொன்றில் கட்டிவிட்டால் எல்லா அலைவரிசைகளும் தெளிவாக கேட்கிறதாம். மரங்களுக்கு மின்னியல் அதிர்வு அலைகளைவாங்கி வழங்கும் சக்தி அதிகமாம் என அறிவித்துள்ளார். (கெ)

## கடந்தாண்டு வால்வெள்ளிதான் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்

லண்டன், ஜூன் 22

கடந்தாண்டு தோன்றிய வால்வெள்ளிதான் உலகம் முழுவதும் தற்கொலை அதிகரிப்புக்கான காரணமென அமெரிக்க தற்கொலைவியலில் நிபுணரான திரு. லோறன் கோல்மன் தெரிவித்துள்ளார்.

''சதர்ன் மெய்ன்'' என்ற பல்கலைக்கழகத்தில் தற்கொலைப் பிரிவில் தற்கொலை தடுப்பு திட்ட இயக்கத்தினராக பணி புரியும் இவர் தமது 19-வது ஆண்டறிக்கையில் இதனை விரிவாக தெரிவித்துள்ளார். வால்வெள்ளி பற்றி இவர் இவ்வறுக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது விஞ்ஞான உலகில் பெரும் வியப்பைக் கொடுத்துள்ளது (கெ)

## குருநகர் மீனவர் நிவாரண நிதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்டைதீவுக் கடலில் கொலையுண்ட குருநகர் மீனவர் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக இதுவரை 53.105 ரூபாய் பொதுமக்களிடமிருந்தும், பொதுஸ்தாபனங்களிடமிருந்தும் கிடைத்திருப்பதாக மேற்படி நிவாரண நிதிக்குப் பொறுப்பாகவிருக்கும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச்சங்கம் தெரிவித்துள்ளது.

நிவாரண உதவி வழங்கும் பொதுமக்கள், ''செயலாளர் கடற்றெழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர்'' என்ற முகவரிக்கோ அல்லது நேரடியாகவோ வழங்கும்படி சங்கம் கேட்டுள்ளது.

ஏற்கனவே 41,600 ரூபாய் சேர்ந்ததுடன் மேலும் நிதி உதவிவழங்கியோர் விபரம் வருமாறு:

திரு வி. வி. சோமசேகரம் கரணவாய் 200/-, திரு. ஏ. ஆர், சுரேஸ் திருநெல்வேலி 200/-, திரு எம். நல்லையா கைதடி 1000/-, குருசுநகர்வர்த்தகர் சங்கம் சின்னக்கடை 8005/-, திரு எம். கதிரவேலு யாழ். கட்டிடத்திணைக்களம் 100/-, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை, 2000/- மொத்தம் 53,105/. [சிவ)

## சாவகச்சேரி இந்து பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, ஞாயிறு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பரிசளிப்புவிழா அடுத்த மாதம் 4ம் திகதி அதிபர் திரு. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். கல்விப்பணிப்பாளருமான இரா. சுந்தரலிங்கம் கலந்துகொண்டு பரிசளிப்பு பேருரையாற்றி பரிசில்களையும் வழங்குவார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மற்றுமோர் பழைய மாணவரும், யாழ். கல்வி அதிகாரியுமான திரு. சோமசுந்தரம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார். (க)

## வருடாந்தஉற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

இருபாலை அருள்மிகு கற்பகப்பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் கடந்த 10ம் திகதி ஆரம்பமகியுள்ளது தொடர்ந்து நடைபெற்ற இவ்வுற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா புதன்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஐ)

## இடமாற்றம்

வேலணை, ஞாயிறு

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாக பல வருடங்களாக கடமையாற்றி வந்த எஸ். எஸ் இளையதம்பி காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு ஏ. வி. மயில்வாகனம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சோழன்இல்லம் முதலிடம்

சுண்டுக்குளி, ஞாயிறு

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலை அதிபர் திரு அ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது

இப்போட்டியில் பிரதம விருந்தினராக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் சோழன் இல்லம் 1வது இடத்தையும் பாண்டியன் இல்லம் 2வது இடத்தையும், சேரன் இல்லம் 3வது இடத்தையும் பெற்றன. [க]

## கண்காட்சி

சாவகச்சேரி, ஞாயிறு

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தின்கல்விக் கண்காட்சி இம்மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளது

இக் கண்காட்யை சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரி திரு ஆ தங்கராசாசம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 23-6-86

## வல்லிபுர ஆழ்வார் சங்காபிஷேகம்

[வல்வெட்டித்துறை]
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வரும் புதன்கிழமை சங்காபிஷேகம் நடைபெற உள்ளது.

அன்று பிற்பகலில் திருமாலின் மணவாளக் கோல உற்சவமும் நடைபெறும்.

## 13 வயதுச் சிறுமி மர்ம மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ் கச்சேரியடியில் திருமதி விஜயதர்மா என்பவர் வீட்டு வேலைக்காரச் சிறுமி மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்,

இம்மர்மமரணம் சம்பந்தமாக ஸ்தலத்தில் விசாரணையை மேற்கொண்ட கிராம சேவையாளர் திரு. மு. மயில்வாகனம் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இறந்த சிறுமி அராலியைச் சேர்ந்த செல்வி இராணி (வயது 13) ஆவார். (ஐ)

## இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கர், இலங்கைத் தமிழ்மக்கள் தொடர்ந்து அகதிகளாக இந்தியாவுக்கு வருவதையிட்டு கவலை தெரிவித்ததுடன் இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமாகில் இந்தியா பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் தெரிவித்தார். [ரா]

# "வடக்கிலிருந்து மட்டுமல்ல சிங்களப் பகுதிகளிலிருந்தும் கொழும்புக்கு குண்டுகள் வரலாம்!"

கொழும்பு திங்கள்,
"வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்துவருகின்ற லொறிகளில் மட்டும்தான் குண்டுகள் கொண்டுவரப்படுவதென்றில்லை; ஏனையசிங்களப் பிரதேசங்களிலிருந்தும் குண்டுகள் செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்படலாம். முழுக்க முழுக்கசிங்களவர்வாழும் இடங்களிலிருந்தும் குண்டுகள் கொண்டுவரப்படலாம். எனவே கொழும்புக்கு வரும் சகலவாகனங்களும் சோதனையிடப்பட வேண்டும்".

எதிர்கட்சித் தலைவர் திரு. அனுராபண்டாரநாயக்கா இவ்வாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பேசுகையிலேயே எதிர்கட்சித்தலைவர் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

"கண்டி வீதியில் உள்ள களனிப்பாலத்தில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரு குறிசுடும் துப்பாக்கிகளுடன் காவல்புரிகின்றனர். இத் துப்பாக்கிகள் 1971ம் ஆண்டு வழங்கப்பட்ட துப்பாக்கிகளாகும். இது பாதுகாப்புக்குப் போதுமானதல்ல கொழும்பு எல்லையிலிருக்கும் சகல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் எதிர்க்கட்சித்தலைவர் கேட்டுக் கொண்டார். (மா)

# "தமிழர் மீதான [redacted] சந்தேகப் பார்வையை படையினர்நிறுத்தவேண்டும்"

## கேர்ணலிடம் பிக்கு வேண்டுகோள்

வவுனியா, ஞாயிறு
"ஆயுதப்படையினர் தமிழ் மக்கள்மீது சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை நிறுத்த வேண்டும்"

இவ்வாறு வன்னிப்பிரதேச சமாதான சபைத் தலைவர் விமலசார தேரோ தவவுனியா இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேக்கடுவவிடம் கேட்டுக்கொண்டார்.

வண. விமலசாரதேரோ இணைப்பதிகாரியை இராணுவ முகாமில் இன்று காலை சந்தித்தார்.

தேரோ தலைமையில்சமாதான சபையைச் சேர்ந்த 12 தமிழ் முஸ்லிம்உறுப்பினர்கள் இச்சந்திப்பின்போது இடம்பெற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது வன்னிப் பிரதேசத்தின் இன்றைய நிலைபற்றி இணைப்பதிகாரிக்கு எடுத்துக்கூறப்பட்டது.

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் இராணுவம் பொலிஸ், போராளிகள் ஆகியோருக்குப் பயப்படவேண்டிய நிலையும், சிங்கள மக்களைப் பொறுத்தளவில் தமிழ்ப் போராளிகளுக்கு மட்டுமே பயப்பட வேண்டியநிலை உள்ளது என்று தேரோவினால் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் வவனியா பொலிஸ் அதிபர் றெஜி விக்கிரமசிங்கா வவனியா சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரி கேர்ணல் ரத்னுயக்கா ஆகியோரும் கலந்து கொண்டார்கள். [வா]

## இன்று

யாழ்ப்பாணம் திங்கள்
வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சபையின் வருடாந்தக்கூட்டம் இன்று பிற்பகல் ஒருமணியளவில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (மா]

## இலங்கைத் தேயிலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பாலான வெளிநாட்டுத் தேயிலைக் கொள்வனவாளர்கள், இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது தெரிந்ததே.

இலங்கைத் தேயிலையின் இந்த விலை வீழ்ச்சியினால் அந்நிய செலவாணி பெருமளவு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

## சென்னையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கட்ட நடவடிக்கையாகவே அவர் திரு. பத்மநாபாவை சந்தித்தார். இச்சந்திப்பின் ஏனைய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

திரு குமாரணதுங்க, ஏனைய தமிழ் இயக்கங்களின் பிரமுகர்களையும் தொடர்ந்து சந்திக்கவுள்ளார்

இனப் பிரச்னை குறித்து சிங்கள முற்போக்கு மற்றும், சாதாரண மக்களின் கண்ணோட்டங்களை எடுத்துக் கூறுவதே இவரின் விஜயத்தின் பிரதான நோக்கமென்று தெரிவிக்கப்பட்டது.

## ஷெல் தாக்குதல்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
களைத்தாக்கியதில் ஸ்தலத்திலேயே இருவரும் பலியானார்கள். கனகரத்தினம் குடல் வெளியேறிய நிலையில் இறந்து கிடந்தார். மகள்தயாநிதியின் தலையிலும் தொடையிலும் காயம் பட்டதுடன் அவரது வலது கையிலுள்ள மூன்று விரல்களும் இல்லாதிருந்தநிலையில் இறந்துகிடந்தார். [ஐ]

## ஆட்சிப் பகிர்வு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வும் நோக்கில் இந்திய அரசாங்கத்துடன் மேற் கொள்ளப்பட்ட சகல தொடர்புகளும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அவர்கள் மூலமாக மக்களுக்கும் சமர்ப்பிக்கப்படும்." என்று திரு அத்துலத் முதலி மேலும் தெரிவித்தார்.

## இன்னமும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பூசகரும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமை இக்கிராமத்தில் இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 40 பேர் கைது செய்யப்பட்டது தெரிந்ததே, [மா]

## நேற்றுக்காலை வசாவிளான் சந்திக்கு வந்த படையினர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், திங்கள்
பலாலி இராணுவ முகாமிலிருந்து வசாவிளான் சந்திவரை நடந்துவந்த இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகள் எதிர் கொண்டு தாக்குதல் நடாத்தினர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரை எதிர் கொண்டு சென்ற போராளி ஒருவர் பலியானார். இவரின் சடலத்தை கைப்பற்ற இரு தரப்பினருக்குமிடையே கடும் சமர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிலமணிநேரத்தின் பின்னர் இராணுவத்தினர் முகாம் நோக்கித் திரும்பியதாகவும், தமது சக போராளியின் உடலை தாங்கள் மீட்டதாகவும் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

நேற்றைய தாக்குதலின் போது வீரமரணமடைந்த எமதுபோராளி வே. ஸ்ரீமுருகதாசிற்கு வீரவணக்கத்தைத் தெரிவிக்கும் அதேவேளையில் அவரது மனைவிக்கும் குடும்பத்தாருக்கும் எமதுஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது உடலை மீட்கச் சென்ற சமயம் உடலின் அடிப் பகுதியில் ஒரு கிறனேட் (சூழ்ச்சிப்பொறி) படையினரால் வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இருந்தும் எவ்வித இழப்புகளும் இன்றி இவர் உடல் எமது வீரர்களால் மீட்கப்பட்டது. (மா)


## மரண அறிவித்தல்

### செல்வன் கிறிஸ்ரி மரினோ செல்வக்குமார்

செல்வன் கிறிஸ்ரி மரினோ செல்வகுமார் [மாணவன் புனிதசம்பத்திரிசியார் கல்லூரி] 22-6-86 காலமானார். இவர் P. P. மரியநாயகம் [பொறியியலாளர் J.M.R. Engineers], மேசி சில்வியா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், வேணுகா, டெறிக் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 1 புதுவீதி, கொய்யாத்தோட்டத்தில் அமைந்திருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக 23-6-86 திங்கட்கிழமை [இன்று] பிற்பகல் 4 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
[C3041] P. P. மரியநாயகம்.

### திருமதி குலசேகரம் அன்னபூரணம்

தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி குலசேகரம் அன்னபூரணம் காலமானார். இவர் சின்னத்துரை குலசேகரம் (இளைப்பாறிய ஆசிரியர் விவேகானந்தா கல்லூரி அநுராதபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பரமநாதன் ஜெகதீஸ்வரி, திருமதி கணேசரட்ணம் அன்னகுலதேவி, திருமதி ரட்ணவேல் சரோஜினிதேவி, திருமதி லோகநாதன் நாகேஸ்வரி (கனடா), குலசேகரம் மகேந்திரராஜா (T. A. நீர்ப்பாசன இலாகா. முருங்கன்), செல்வி குலசேகரம் மங்கையற்கரசி ஆகியோரின் அருமைத்தாயாரும், திரு. V. பரமநாதன் (ஜேர்மனி), திரு. S. K. கணேசரட்ணம் (கனடா), திரு. K. ரட்ணவேல் (கனடா), திரு. V. லோகநாதன் (கனடா), திருமதி சிவமணி மகேந்திராஜா ஆயோரின் அன்பு மாமியாரும், திருமதி தர்மலிங்கம் ராசம்மாவின் சகோதரியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று தும்பளை பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: கு. மகேந்திராஜா
[A 861]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கனகரத்தினம்
(பெரியதம்பி)
### கனகரத்தினம் தயாநிதி

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் கனகரத்தினம் [பெரியதம்பி], கனகரத்தினம் தயாநிதி ஆகியோர் அகாலமரணமானார்கள். இவர்கள் அழகம்மாவின் அன்புக் கணவரும், அருமை மகளும், தயானந்தநிதி, கலாநிதி, பதுமநிதி, சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகோதரரும். திரு. கனகரத்தினம் மூத்துப்பிள்ளை, திருமதி பொ. தங்கலிங்கம் (விவசாய இலாகா), அரியகுட்டி [விவசாய உத்தியோகத்தர் கிளிநொச்சி], கனகராசா [வர்த்தகர் கல்முனை], ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 23-6-86 திங்கட் கிழமை பகல் 12 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கு கிராம மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C 3042] தகவல்: ஆ. அரியகுட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org